[2024 பிப்ரவரி 21

பிற்பகல் 12–25

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2023–2024 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்தாறு முதல் நூற்று ஏழு வரையிலான 22 அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2023–2024 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அறுபத்து நான்கு முதல் எழுபத்தொன்று வரையிலான 8 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(உ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, முனைவர் கோவி. செழியன், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளியவனாகிய என்னை, மனுக்கள் குழுவின் தலைவனாக நியமித்து, அறிக்கைகளை இந்த அவையில் தாக்கல் செய்வதற்கான வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2024 பிப்ரவரி 21] [முனைவர் கோவி. செழியன்]

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2023–2024 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் இருபத்து மூன்று, இருபத்து நான்கு மற்றும் இருபத்தைந்து ஆகிய 3 அறிக்கைகளை மனுக்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஊ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2023–2024 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 7–வது அறிக்கையினை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(8) அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*